## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

# 1984 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, மக்கள் குடியிருப்பு (நீக்கற்) சட்டம்

*[1984, மார்ச்சு மாதம் 21 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1984 மார்ச்சு மாதம் 23 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : சதம் 60

[1984, மார்ச்சு மாதம் 21 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ. 6/80

1574

**1976 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, மக்கள் குடியிருப்புச் சட்டத்தை நீக்கஞ்செய்வதற்கும், மக்கள் குடியிருப்பு ஆணைக்குழுவின் ஒழிப்போர்களின் செயல்களைச் செல்லுபடியுடையனவாக்குவதற்கும், பதிவு செய்யப்பட்ட மக்கள் குடியிருப்புக்கள் தொடர்பில் ஒழிப்போர்களை நியமிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக :—

1. இச் சட்டம் 1984 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, மக்கள் குடியிருப்பு (நீக்கற்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தாறும் ஆண்டின் 25 ஆம் இலக்க, மக்கள் குடியிருப்புச் சட்டம் இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது. 1976 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்தை நீக்குதல்.

3. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ், 1981 நவம்பர் 16 ஆம் தேதியன்று நிறைவேற்றப்பட்ட பாராளுமன்றத் தீர்மானத்தைப் பின்பற்றி நியமிக்கப்பட்ட ஒழிப்போர்களால் இயைபான காலப் பகுதியின் போது பிரயோகிக்கப்பட்ட அல்லது புரியப்பட்ட ஏதேனும் தத்துவம் அல்லது கடமை செல்லுபடியுடன் பிரயோகிக்கப்பட்டதாக அல்லது புரியப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், செல்லுபடியுடன் பிரயோகிக்கப்படுவதாதலும் புரியப்படுவதாதலும் வேண்டும்; அத்துடன், இயைபான காலப்பகுதியின் போதான அத்தகைய பிரயோகம் அல்லது புரிகை எதுவும், அத்தகைய ஒழிப்போர்கள் பாராளுமன்றத் தீர்மானமொன்றைப் பின்பற்றி நியமிக்கப்படவில்லை, அல்லது பாராளுமன்றத் தீர்மானத்தைப் பின்பற்றி மக்கள் குடியிருப்பு ஆணைக்குழு கலக்கப்படவில்லை என்ற நிகழ்வின் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது. ஒழிப்போர்களின் நியமனத்திலுள்ள குறைபாடுகள், முறையான நியமனங்கள் செய்யப்படுவதற்கு முன்பு பிரயோகிக்கப்பட்ட அல்லது புரியப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் செல்லுபடியற்றனவாக்குதலாகாது.

இப் பிரிவின் நோக்கத்துக்காக "இயைபான காலப்பகுதி" என்பது 1980 ஒகத்து 18 ஆம் தேதிக்கும் 1982 ஒகத்து 19 ஆம் தேதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதி எனப் பொருளாதல் வேண்டும்.

4. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தாறும் ஆண்டின் 25 ஆம் இலக்க, மக்கள் குடியிருப்புச் சட்டம் நீக்கஞ் செய்யப்பட்டமை எவ்வாறிருப்பினும்— மக்கள் குடியிருப்பு தொடர்பாக ஒழிப்போர்களை நியமித்தல்.

(1) மக்கள் குடியிருப்பு ஆணைக்குழு தொடர்பில் நியமிக்கப்பட்ட ஒழிப்போர்கள், சொல்லப்பட்ட மக்கள் குடியிருப்புச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மக்கள் குடியிருப்பு ஒவ்வொன்றிற்கும் நியமிக்கப்பட்ட ஒழிப்போர்களாகக் கருதப்படுதல் வேண்டும்;

(2) இச் சட்டம் நடைமுறைக்கு வரும் நாளுக்கு நேர்முந்திய நாளன்று இருக்கும் அத்தகைய மக்கள் குடியிருப்பு ஒவ்வொன்றினதும் சொத்துக்களும் பொறுப்புக்களும் தொடர்பாக, ஒழிப்போர்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட ஒழிப்போனொருவருக்குள்ள அதே தத்துவங்களை உடையவர்களாதல் வேண்டும்.

மேன்மிகைப் பணத்தைத் திறைசேரிக்கு உரித்தாக்கல்.

5. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 21 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக விடயத்துக்கேற்றவாறு, மக்கள் குடியிருப்பு ஆளேக்குழுவினதும், மக்கள் குடியிருப்புக்களினதும் நிதிகள் முறையே அத்தகைய குழுக்கள் ஒவ்வொன்று தொடர்பிலும் நியமிக்கப்பட்ட ஒழிப்போர்களினால் பயன்படுத்தப்பட்ட பின்னர் எஞ்சியிருக்கும் எவையேனும் பணங்கள் திறைசேரிச் செயலாளருக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.